# யாழ். போதனா வைத்தியசாலை மீதும் நள்ளிரவு விமானக் குண்டுத் தாக்குதல்

பக்கங்கள் நான்கு                விலை ரூபா 3-50

முரசொலி

முரசு 04 ஒலி 212 வியாழன் 13-09-1990 (அவணி 28) ஸபர் 23

## இரண்டாவது தடவையாக சம்பவம்

நேற்று முன்தினம் நள்ளிரவு அவ்ரோ விமானம் மூலம் யாழ். நகரில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சு சம்பவத்தில் யாழ்.போதனா வைத்திய சாலையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஐந்துமாடிக்கட்டிடம்சேதமடைந்தது. வெடிக்காத நிலையில் ஒரு குண்டு நேற்றுக்காலை மீட்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் இருந்து போராளிகள் தாக்குதல் நடத்துகின்றனர் என்றும், அது தொடருமானால் படையினர் பதில் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என்றும் பாதுகாப்பு அமைச்சு சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. சென்ற மாதம் 5 ஆம் திகதியும் விமானத் தாக்குதல் மூலம் 17 ஆம், 18 ஆம் வார்ட்டுக்கள் சேதமடைந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. 68 ரு

### ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் தமிழர் மீது தொடுத்துள்ள

# இனப்படுகொலையை நிறுத்த ஐ.நா.வுக்கு கோரிக்கை

(லண்டன்)

**"இலங்கைத் தமிழர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள இனப் படுகொலைப் போர் குறித்து ஆழ்ந்த கவலையடைவதுடன், ஸ்ரீலங்கா ஆயுதப்படைகள் நாட்டின் வட-கிழ்ப் பகுதிகளில் நடாத்தி வரும் வான் தாக்குதலை நிறுத்துவிப்பதற்கான சகல முயற்சிகளையும் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேண்டும்."**

இவ்வாறு 1992-ம் ஆண்டில் கொண்டுவரப்படவுள்ள "ஐரோப்பிய சட்டம்" கறுப்பின மக்களையும் இன வழி சிறுபான்மையினரையும் அகதிச் சமூகங்களையும் எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றி ஆராயும் லண்டனில் இயங்கும் தமிழ் அகதிகள் நடவடிக்கைகள் குழு (Tamil Refugee Action Group) ஐ. நா.வைக் கேட்டுள்ளது.

"கொடூரமான இக்குண்டுத் தாக்குதலில் மக்கள் ஆயிரக்கணக்கில் உயிரிழக்கவும் அங்கவீனராகவும் காரணமானதுடன், முழுச் சமூகமே சிதறுண்டதால் முன்னெப்பொழுதும் நேர்ந்திராத அளவுக்கு அகதிகள் பிரச்சினையை உருவாக்கியுள்ளது."

"மனித உரிமைகள் இவ்வாறு மிருகத்தனமாக மீறப்படுவதையும் தமிழ் மக்கள் ஈவிரக்கம் அற்ற முறையில் அழிக்கப்படுவதையும் நாகரிக உலகத்தால் சகித்துக்கொண்டிருக்க முடியாது".

இவ்வாறு கடந்த ஜுலை 22-ம் திகதி லண்டனில் நடைபெற்ற மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தெரிவிக்கிறது.

—04ஆம் பக்கம் பார்க்க

## கோட்டைக்கு செல்ல முடியாதாம்

கோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அதிகமாக இருப்பதாலும்கோட்டைக்குச் செல்லும் பண்ணை தாம்போதியில் பொறிவெடிகள் வைக்கப்பட்டுள்ளதாலும் படையினர் கோட்டைக்குள் செல்வது அபாயமிக்கதொன்றாகவே இருப்பதாக நேற்றுக் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. து

## சடலங்களிலும் கொள்ளை

மண்கும்பான் அல்லைப்பிட்டிவ கடற்கரையோரங்களில் ந்தடையும் சடலங்களில் காணப்படுகின்ற பொருட்களைத்தேடிக்

— 04ஆம் பக்கம் பார்க்க

## போர் நிறுத்தம் ஏற்படுத்த ஜெயலலிதா கோரிக்கை

இலங்கையில் நடக்கும் இனப்படு கொலைகளை நிறுத்த இலங்கை அரசின் மீது இந்திய அரசு நிர்பந்தங்களை ஏற்படுத்தவேண்டும் என இந்தியப்பிரதமர் சிங்கை அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கேட்டுள்ளார்.

இலங்கைஅரசு போர் நிறுத்தத்தை அறிவிக்கவும், போரா

— 04ஆம் பக்கம் பார்க்க

## விபரம் அறிந்துகொள்ள

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பற்றிய விபரங்களை அறிய விரும்புகிறவர்கள் மானிப்பாயில் இயங்கும் செஞ்சிலுவைச்சங்கத்திடம் இருந்து "கடித உறையினை" (Letter pad) பெற்று அதனை நிரப்பிக் கொடுப்பதன் மூலம் அவர்கள்பற்றிய விபரங்களை அறியலாமென்றும், உடனடியாக மானிப்பாயில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் தொடர்பு கொள்ளும் படியும் கேட்டுள்ளனர்.

இதேவேளை குவைத்தில் இருந்து அகதிகளாக வெளியேறி ஜோர்டான்,கெய்றோ,

— 04ஆம் பக்கம் பார்க்க

## நள்ளிரவில் வீசப்படும் 250 கிலோ பீப்பாக் குண்டு

நேற்று முன்தினமிரவு சுமார் ஒன்பதரை மணியளவில் அவ்ரோ விமானத்திலிருந்து வீசப்பட்ட மூன்று குண்டுகள் - ஒவ்வொன்றும் சுமார் 250 கிலோவுக்கு மேற்பட்டவை வெடிக்காத நிலையில் கிடக்கக் காணப்பட்டன.

பச்சைநிற வர்ணம் பூசப்பட்ட இப் பீப்பாக் குண்டுகளில் ஒன்று யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை அண்மித்த பகுதியிலும், இன்னொன்று நாவலர் வீதி, மணிக்கூட்டு வீதிச்சந்திக்கு அண்மையிலும் மற்றொன்று ஓட்டுமடம் பகுதியிலும் வீழ்ந்தன. (66-47து)

### தீவுப்பகுதியில்

## கொல்லப்பட்டவர் விபரம் பதியுமாறு கோரிக்கை

தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்டவர்களின் விபரங்களை உடனடியாகச் சுருவில் கிராமத்தில் உள்ள தேவமாதா ஆலயத்தில் அவர்களினது உறவினர்களால் பதிவு செய்து கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பங்குத்தந்தை அருட் திரு எஸ். எவ். கிருபானந்தன் அடிகளார் கேட்டுள்ளார்' (19-து)

### பிரிட்டிஷ் அகதிகள் நலன்காப்புச் சங்கம் தகவல்

## வடக்கு-கிழக்கு பகுதியில் பொதுமக்கள் பட்டினியால் இறக்கும் தொகை அதிகரிப்பு

வடக்கு கிழக்குப்பகுதியில்பட்டினியால் இறக்கும் பொதுமக்களின் தொர்கை அதிகரித்து வருவதாகவும் வடக்கிலும் கிழக்கிலும் மொத்தசனத் தொகையில் அரைவாசிப்பகுதியினர் அகதிகளாகி விட்டனர் எனவும் பிரிட்டிஷ் அகதிகள் நலன்காக்கும் சங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கில் பத்துக்குழந்தைகள் பட்டினியால் பலியாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் இத்தொகை இதைவிட அதிகமாக இருக்கலாம் எனவும் மேற்படி சங்கம் குறிப்பிட்டுள்ளது.கிழக்கு பல்கலைக்கழக அதிகமுகாமில் தங்கியிருந்த 29 குழந்தைகள் அங்கு விநியோகிக்கப்பட்ட அழுக்கு நீரைப் பருகியதால் வயிற்றோட்ட நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதியில் பட்டினியைத் தாங்க முடியாது தற்கொலை முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் பிரிட்டிஷ் அகதிகள் நலன் காக்கும் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது, து

### தபால் திணைக்கள அத்தியட்சகர்

## மக்கள் கலைந்து ஓடுவதால் தபால் வழங்க முடியாதநிலை

இடம்பெயர்ந்து வேறுஇடங்களில் இநப்போருக்கான தபால்கள் நேற்று முன்தினத்திலிருந்து யாழ். இந்து மகளிர்கல்லூரியில் வழங்கப்பட்டு வருகின்றன.

குருநகர், பாஷையூர், ஆஸ்பத்திரிவீதி போன்றபல இடங்களில்ருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கே தபால்கள் வழங்கப்படுகின்றன.

நேற்று முன்தினம் இந்து மகளிர் கல்லூரியில் தபால்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த போது- பொம்மர்கள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகம் பகுதியிலும் நள்ளிரவுக் குண்டு வீச்சு

நேற்று முன்தினம்இரவு12.30 மணியளவில் சுன்னாகத்தில் 'அவ்ரோ' விமானத்தில் இருந்து "பீப்பா" க்குண்டுகள் வீசப்பட்டன. இதனால் பல வீடுகள் சேதமடைந்தன.

இ. மகேந்திரம் என்பவரது காணிக்குள் ஒரு குண்டு விழுந்து வெடித்ததால் அவரது வீடும், க. சிவபாதம், சி. நடராசா ஆகியோரது வீடுகளும் டாக்டர் இராஜேந்திராவின் வைத்தியசாலையும் பாரிய சேதங்களுக்குள்ளாயின. விமானத்தின் சத்தத்தைக் கேட்டு வீட்டுச் சொந்தக் காரர்கள்பதுங்குகுழிக்குள் சென்றதால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இரண்டாவது குண்டு சுன்

— 04ஆம் பக்கம் பார்க்க

## சத்துருக்கொண்டானில் 150 தமிழர் வெட்டிக் கொலை

சத்துருக்கொண்டானில் நேற்று முன்தினம் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் நூற்றிஐம்பது தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் இந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துள்ளபோது முஸ்லிம் ஊர்காவற் படையினர் இப் படுகொலையைச் செய்துள்ளனர்.

இரு ஊர்காவற் படையினர் விடுதலைப் புலிகளின்

—04ஆம் பக்கம் பார்க்க

# மாதாந்த உதவிப் பணம் 4 மாதமாக வழங்கப்படவில்லை

யாழ். அரச செயலகத்தின் சமூக சேவைப் பகுதியினரால் வழங்கப்படுகின்ற பொது சன மாதாந்த உதவிப்பணம், கசரோக நிவாரணப் பணம் புற்றுநோய் உதவிப்பணம், தொழுநோய் உதவிப்பணம் முதலானவை கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.


ஊரடங்குச் சட்டத்தால், யாழ் செயலகம் தொடர்ச்சியாகச் செயற்படாதிருந்தமையால், இந்த உதவிப் பணங்கள் வழங்க முடியாமற் போயிருக்கலாமென்றும், இப்போது இயங்குவதாகப் பத்திரிகைகள் மூலம் அறிந்தே இவ்வுதவிப் பணங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தாம் செயலகத்துக்கு வருகை தந்ததாக இவ்வுதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்வோர் தெரிவித்தனர்.

இந்த உதவிப் பணங்களை வழங்குவதற்குரிய நிதி இல்லாமையால் அவற்றை வழங்க முடியாதுள்ளதாகவும், மேலதிக நிதியைப் பெற்றே இவற்றை வழங்க வேண்டியிருப்பதாகவும் அரச செயலக உயரதிகாரிகள் தெரிவித்தனர். (47கி)

## சுவிஸிலிருந்து சாம்பர் வந்தது

சுவிட்சர்லாந்தில் தொழில் செய்து வந்தபோது அகால மரணமடைந்த யாழ்ப்பாணவாசி ஒருவரின் சாம்பரை அந்நாட்டைச் சேர்ந்த சமூக சேவையாளர் ஒருவர் அவரது சொந்த ஊரில், அவரது உறவினரிடம் கொண்டு வந்து ஒப்படைத்தார். பிரஸ்தாப வாலிபர் மட்டுவிலைச் சேர்ந்தவர். அங்குள்ள சமூக அமைப்பு ஒன்றில் அங்கம் வகித்து வந்தார். அவ்வமைப்பைச் சேர்ந்த குறிப்பிட்ட சுவிஸ் வாசி அமைப்பின் சார்பில் ஒரு தொகையையும் உறவினரிடம் கையளித்து இவரை மட்டுவில் தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தினர் வரவேற்று உதவினர். (ஸ்ரீ)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



**மகேந்திரன் ஜெயேந்திரராசா**

(ஜெயராஜ்).

| தாய்மடியில்: | தாயகமடியில்: |
|---|---|
| 15 - 10 - 1972 | 16 - 06 - 1990 |

பேசுந் தமிழைப் பெரிதென்று எண்ணியதால்
புலியாக மாறிப் போர்க்களம் சென்றாய்நீ;
காசும் பொருளுந்தான் கண்களென எண்ணுகிற
காலமிதில் ''ஈழக்'' கனவு கண்டாய்;
வீசும் புயலாய்... வீறுள்ள மின்னலாய்..
விண்ணதிரப் போரிட்டாய் வீரமுடன்;
தேசம்தான் உயிரென்று தீரமுடன் சென்றவனே!
தேடுகிறோம் உன்னை! திரும்பிவா! எம்முயிரே!

எங்கள் அன்புப்புத்திரன் அகாலமரணமடைந்ததைக் கேள்வியுற்று மரணச்சடங்குகளில் பங்கு பெற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் நாளை 14.09.90 வெள்ளிக்கிழமை காலை 6.00மணியளவில் எமதில்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள், இயக்கத்தோழர்கள், தோழியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், பேரன், பேத்திமார்,
பெரியப்பா, பெரியம்மா, மாமன்மார், மாமிமார்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

மயிலியதனை,
தொண்டமானாறு. 09048

# சூடாநாட்டில் பரவலாக விளைபொருள் உற்பத்தி வீழ்ச்சி

தற்போது நிலவும் மிகக் கடினமான நெருக்கடி நிலையானது விவசாயிகளை மேன் மேலும் வாட்டி வதைத்து வருவதாக விசனத்துடன் தெரிவிக்கப்படுகிறது.

விதைநெல் தட்டுப்பாடு நிலவுகின்ற போதில் உளளதைக் கொண்டு ஓரளவு உற்பத்தியை ஆரம்பிக்கலாம் என்றாலும்கூட வயல் வெளியில் நடமாடுவதை, மேலே நாளாந்தம் சரமாரியாக உக்கிரத்துடன் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்து வருவதால் தடுத்து வருகிறது.

எரிபொருள் இல்லாவிட்டாலும் மாடுகளைக் கொண்டு உழுது, நிலத்தைப் பண்படுத்தி நெல் விதைக்கவும் இதனால் தடை ஏற்படுகிறது.

அத்துடன் வாழைச் செய்கை அருகிவிடும் இக்கட்டும் ஏற்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் விலை கணிசமான அளவுக்குக் குறையாதபடியால் நீர் இறைப்பு சீராகச் செய்யமுடியவில்லை என்கின்றனர்தோட்டக்காரர்.

இதனால் வாழைகள் போதிய நீரின்றி சரியும் நிலை உருவாகியுள்ளது.

ஏற்கனவே சிறுதானிய உற்பத்தி பெரிதும் பல பகுதிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆக, குடாநாட்டின் பல பகுதிகளிலும் விளைபொருள் உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சி காண்பது தவிர்க்க முடியாததே என்று அஞ்சப்படுகிறது. (ஸ்ரீ)

## பேராதனை, கொழும்பு மாணவர் கவனத்திற்கு

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள பேராதனை, கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கான முக்கிய ஆலோசனைக் கூட்டமொன்று இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும் என மேற்படி பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். விரிவுரைகளுக்கு திரும்புவது பற்றி இக்கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

மேற்படி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பழைய மாணவர்களையும் மற்றும் 1988 - 89-ம் வருடத்துக்குரிய புதிய மாணவர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## எடையில் இப்படியும் புது மோசடி

கல்வியங்காடு சந்தைக்குள் சீனி மலிவாக விற்பனை செய்யப்படுவதாகக் கேள்விப்பட்டு அங்கே சீனிவாங்குவதற்காகச் சென்ற ஒருவருக்கு ஒரு புது அனுபவம் கிடைத்தது. ஒரு கிலோ சீனி தரும்படி சொல்லி விட்டு அவர் காத்திருந்தார்.

சீனி விற்பனை செய்தவர் தராசின் ஒருபுறம் ஒரு கிலோ படியையும் மறுபுறம் சீனியையும் வைத்து நிறுக்கும் போது சீனியோடு சேர்த்து இன்னொரு சிறிய பொருளையும் போட்டு நைஸாக நிறுப்பதை அவர் கண்டு கொண்டார். சிறிதும் தாமதியாமல் உடனேயே தராசுக்குள் கையை வைத்து அந்தப் பொருளையும் (அது ஒருகல்) எடுத்துக் கொண்டு ஒரு கிலோ சீனியை சரியாக எடைபோட்டு வாங்கி பணத்தைக் கொடுத்து விட்டு அவர் வந்துவிட்டார்.

தராசுக்குள் தான் எடுத்துக் கொண்ட அந்தக் கல்லை அவர் இன்னொரு வியாபார நிலையத்தில் கொண்டு வந்து காட்டி அதை நிறுத்துப் பார்க்கையில் சரியாக அது 25 கிறாம் எடையுள்ளதாக இருந்தது. (53 ஸ்ரீ)

## சிறு விளம்பரம்

### புத்தகம்

குடும்ப ஜோதிடம், நீங்கள் ஜோதிடம் கற்றுக் கொள்ளவும், ஜாதகம் கணிக்கவும், விவாகப் பொருத்தம் பார்க்கவும், சுப முகூர்த்தங்களுக்கு நாட்கள் குறிப்பிடவும், பலன்கள் காணவும் உபயோகமான பல அரிய விஷயங்கள் அடங்கிய துணைவன் விலை 45/- விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். 09038

### தவறிவிட்டது

சின்னவன் பொன்னன் புத்தூர் மேற்கு. புத்தூர் (393071362 V) எனும் பெயர் விலாசமுள்ள தேசிய அடையாள அட்டையொன்று ஆடிமாதம் 21-ஆம் திகதி சாவகச்சேரியில் தவறி விட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (09055)

# யாழ். ஆசிரியர் ஆகஸ்ட் சம்பளம் கோட்டங்களுக்கு அனுப்பப்பட்டது

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கான ஆகஸ்ட்மாத சம்பள காசோலைகள் யாழ். கல்வித் திணைக்களத்தினால் பெரும்பாலான கோட்டக் கல்வி அலுவலகங்களிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில கோட்டக் கல்வி அலுவலகங்கள் தங்களுக்குரிய சம்பளக் காசோலையை இன்னும்வந்து பெறவில்லை என்றும் அவர்கள்வந்துதிணைக்களத்தில்தங்களுக்குரிய காசோலையைப் பெறமுடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பை அடுத்து நேற்று ஊழியர்களின் வருகை யாழ். கல்வித்திணைக்களத்தில் ஓரளவு அதிகரித்துக்காணப்பட்டது. (70 கி)

# பயிற்சிபெறாத 15,000 ஆசிரியருக்கு 1993 இறுதிக்குமுன் ஆசிரியபயிற்சி

சகல ஆசிரியர்களுக்கும் 1993ம் ஆண்டு இறுதிக்குள் ஆசிரிய பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தற்பொழுது சுமார் பதினையாயிரம் ஆசிரியர்கள் எவ்விதப் பயிற்சியும் பெறாமல் பாடசாலைகளில் கற்பித்தல் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் சிலர் சேவை முன்பயிற்சியைக்கூடப் பெற்றிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பயிற்சி பெறாத சகல ஆசிரியர்களுக்கும் 1993ம் ஆண்டு இறுதிக்கு முன்னர் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (கி)

# ஒப்பந்த ஊழியர் சம்பளம் ஜூலை முதல் நிறுத்தம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் ஒப்பந்த அடிப்படையில் வேலைசெய்து வந்த ஊழியர்களுக்கு ஜூலை மாதம்முதல் வேதனம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் சாலைகளில் நடாத்துநர், சாரதி, பொறியியல் ஊழியர் தரத்தில் இருநூற்றிநாற்பது ஊழியர்கள் கடமை புரிந்து வருகின்றனர்.

இவர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையிலேயே கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். ஆறுமாதங்களின் பின்னர் இவர்களை அமைய ஊழியர்களாகவோ, நிரந்தர ஊழியர்களாகவோ சேர்த்துக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் ஜூலை மாதத்திலிருந்து இவர்களுக்குரிய வேதனத்தை வடபிராந்திய போக்குவரத்துச்சபை நிறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-31-கி)

## மூன்றாம் கட்ட நிவாரண வேலைகள்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் மூன்றாம் கட்ட நிவாரணப் பெர்மிட் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்ட நிவாரணப் பெர்மிட் எடுத்தவர்களுக்கு மூன்றாம் கட்ட பெர்மிட் வழங்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

மாதாந்தம் மொத்தச் சம்பளமாக 1500 ரூபாவிற்குள் பெறுபவர்களுக்கு விசேட நிவாரணப் பெர்மிட் வழங்கப்படும். அரச ஊழியர்களுக்கு இந்தப் பெர்மிட் வழங்கப்பட மாட்டாது என மேலும் தெரியவருகிறது. (17 கி)

## அகதிகளுக்கு முதல்கட்ட உதவி

அரியாலை கிழக்குப் பகுதியில் தற்சமயம் தங்கியுள்ள அகதிகளுக்கு றெட்பானா மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிதியம் என்பன ஒன்று சேர்ந்து உதவிப் பொருட்களை வழங்கியுள்ளன.

இப்பகுதியில் தங்கியுள்ள 780 குடும்பங்களைச் சேர்ந்த 2776 பேருக்கு முதல்கட்ட உதவியாக கடந்த 11-ம் திகதி இந்த நிறுவனங்களினால் சுமார் 3500 கிலோ அரிசியும், சவர்க்கார வகைகளும் வழங்கப்பட்டன. (கி)

## திருச்சிலுவை திருட்டு

தொல்புரம் அந்தோனியார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு அடி நீளமான திருச்சிலுவை இரவுவேளை இனம் தெரியாதோரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சிலுவை வெள்ளியினால் செய்யப்பட்டதெனக் கருதியே திருடர்கள் அதனை எடுத்துச் சென்றிருக்கலாமெனக்கருதப்படுகின்றது. (07-கி)

# முரசொலி

எமது சிந்தனை

1990 - 09 - 13 வியாழன்

"நரிகளுக்கு வளைகளும், வானத்துப்
பறவைகளுக்குக் கூடுகளும் உள;
மனுமகனுக்கோ தலைசாய்க்கவும் இடமில்லை!"
— இயேசு பெருமான்

## அரசு நிறுவும் அகதி முகாம்கள்

போராலும் மனித சமுதாயத்தை அலைக்கழிக்கும் பிற முரண்பாடுகளாலும் லட்சக்கணக்கான மக்கள் தத்தம் சொந்த நாடுகளை விட்டு ஓடுகிறார்கள்; அகதிகளாகிறார்கள்.

உண்மையில் 'அகதிகள்' எனப்படுவோர் யார்? மனித உரிமைகள் பற்றிய ஐ. நா கைந்நூல் தரும் வரைவிலக்கணம் இது:

"Refugees, by definition, are people who leave their homelands because of political events to seek security elsewhere..."

"அரசியற் சூழ்நிலைகளால் தமது தாய்நாடுகளைத் துறந்து பிற நாடுகளில் பாதுகாப்புத் தேடும் மக்கள் அகதிகள் எனப்படுவர்"

அகதிகள் தம் உறைவிடங்களிலிருந்து பலவந்தமாக வேரோடு பெயர்க்சப்பட்டவர்கள். அவர்களுடைய எதிர்காலமே அவர்களுக்குக் கிடைக்கும் — அல்லாது கிடைக்காது போகும் — புகலிடத்தைப் பொறுத்தது.

அடிப்படை மனித உரிமைகள் பற்றிய ஐ நா.வின் பிரகடனத்தின் 13 ஆம் 14 ஆம் பிரிவுகள், இது தொடர்பாக, மனங்கொள்ளத்தக்கவை:

'Everyone has the right to leave any country, including his own, and to return to his country"

"Everyone has the right to seek and to enjoy in other countries asylum from persecution"

"சொந்த நாடு உட்பட எந்த நாட்டையும் விட்டு வெளியேறவும், தன் நாட்டுக்குத் திரும்பவும் ஒவ்வொருவனுக்கும் உரிமை உண்டு"

"ஒடுக்கு முறைக்குத் தப்பிப் பிற நாடுகளில் புகலிடம் கோரவும், அனுபவிக்கவும் ஒவ்வொருவனுக்கும் உரிமை உண்டு"

ஒருவர் இனத்தின் பேரால், மொழியின் பேரால், மதத்தின் பேரால் அல்லது வரித்துக் கொண்ட அரசியற் சித்தாந்தத்தின் பேரால், தமது சொந்த நாட்டில் அடக்கு முறைக்காளாகலாம் அல்லது துன்புறுத்தப்படலாம் என்றும்-

அத்தகைய கொடுமைக்குத் தப்பி அயல்நாடொன்றில் புகலிடம் கோருவது — மனிதர் என்ற முறையில் — அவருக்குள்ள அடிப்படை உரிமை என்றும் — மனித உரிமைகள் பிரகடனத்தை வரைந்த சிற்பிகள் உணர்ந்திருந்தனர்.

1958-ஆம் ஆண்டு தொடக்கம், காலத்துக்கு காலம் இனக்கலவரங்களால் தமிழ் மக்கள் அகதிகளாய் இடம் பெயரவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகி வந்துள்ளனர். "தமிழருக்கென்று ஒரு பாரம்பரிய தாயகம் இருப்பதால் அல்லவா, அவர்கள் சுயாட்சி கோருகிறார்கள்! தமிழர் பிரதேசம் என்ற ஒன்றே இல்லாமற் செய்து விடுவோமே!" என்ற வஞ்சகத் திட்டத்தை, 1983 இன் பின், மிகக் குரூரமாக நிறைவேற்ற முயன்ற அரசு, தனது படைகளைக் கொண்டு பல கிராமங்களில் வாழ்ந்த தமிழர்களை ஓட்டிவிட்டு, சிங்களவர்களைக் குடியேற்றியது. இது நாட்டின் புவியியலமைப்பை — இனப்பரம்பலை — மாற்றும் முயற்சி.

இக்கொடுமைகளுக்கு அஞ்சித் தமிழ்மக்கள் மேல் நாடுகளில் புகலிடம் தேடலானார்கள். எனினும் பெரும்பாலோர் தமது வாழ்வும் தமது வளமும் தமது மண்ணிலேயே தங்கியுள்ளது என்ற நம்பிக்கையால் தொடர்ந்தும் இங்கே வாழ்ந்து வந்தனர்.

ஸ்ரீ லங்கா ராணுவத்தினரின் அட்டூழியங்களை நேரடியாகச் சந்திக்க நேர்ந்த மக்கள் 1984 — 86 காலகட்டத்தில், தமிழ் நாட்டுக்கு ஓடினர். 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதும் நாடு திரும்பினர்.

இவ்வாண்டு, போர் தொடங்கியபின், இது வரை, ஒரு லட்சம் தமிழ்மக்கள் அகதிகளாகத் தமிழ்நாடு போயுள்ளனர்.

அகதிகள் சுமையைச் சாட்டாக வைத்துக் கொண்டு இந்தியா முன்பு தலையிட்டதை நினைவு வைத்திருக்கும் ஜனாதிபதி, 'ஸ்ரீ லங்காவிலேயே அகதி முகாம்களைத் திறக்கப்போகிறோம்!' என அறிவித்தார். இந்தியா இதை ஆதரித்தது. ஐ. நாவும் இத் திட்டத்தை அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது.

பிரச்சினையின் மையம் இந்தியாவுக்கு நகராமல் இலங்கையிலேயே இருப்பது இலங்கை அரசாங்கத்துக்கு 'வசதி'. அகதிகள் தனது பக்கம் வராமல் இருப்பது இந்தியாவுக்கு வசதி. இரு நாடுகளும் ஒத்துப் போவது ஐ நாவுக்கு வசதி. ஆனால் முத்திறத்தாரும் கரிசனை காட்டாத ஓர் அம்சம் உண்டு: சொந்த நாட்டை விட்டு வெளியேறும் உரிமை அகதிகளுக்கு உண்டு. இது ஐ. நா. போற்றும் அடிப்படை மனித உரிமை.

ஆகவே வவுனியாவிலும் மடுவிலும் அரசு நிறுவும் முகாம்களில் தமிழ் அகதிகளை வலுக் கட்டாயமாகத் தங்கவைக்க யாராலும் முடியாது. தங்கச் செய்தால், அது தடுப்புக்காவலாக அல்லவோ முடியும்!

## பயிற்சி நிறுத்தம்

திருநெல்வேலி அரசினர் விவசாயப் பண்ணையில் படித்து வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு நடாத்தப்பட்டுவந்த விவசாயப் பயிற்சி நெறி தற்போதைய போர்க் கால நடவடிக்கையால் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பண்ணை உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நாட்டில் சுமூக நிலை ஏற்பட்டதும் பயிற்சி மீண்டும் ஆரம்பமாகும் என அந்த அதிகாரி தெரிவித்தார். (33கி)

## மிதிவெடியில் காலை இழந்தார்

பருத்தித்துறை கொட்டடிப் பிள்ளையார்கோவில் பகுதியில் மிதிவெடி வெடித்ததில் பருத்தித்துறை தும்பளைவீதி வாசியான இரத்தினசிங்கம் மனோ (18) என்ற இளைஞர் தனது காலை இழந்தார்.

இப்பகுதியில் உள்ள பற்றைகளை வெட்டி துப்புரவாக்கும் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை இவ் விபத்து நிகழ்ந்தது.

இந்த இடத்தில் முன்னர் இலங்கை இராணுவ முகாமும் பின்னர் இந்திய இராணுவ முகாமும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விபத்தைத் தொடர்ந்து இடம் பெற்ற தேடுதலின்போது ஒன்பது பிளாஸ்ரிக் மிதிவெடிகள் மீட்கப்பட்டு வெடிக்கவைக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது, (ப-17கி)

## ஒய்வூதியம் இதுரை இல்லை

புங்குடுதீவு, நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்தின் உதவியுடன் இயங்கி வரும் கிராமிய வங்கியில் ஓய்வூதியங்களை பெற்றுவரும் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட ஓய்வூதியக்காரர்களுக்கு இதுவரையில் ஆடி, ஆவணி. புரட்டாதி மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப் படவில்லை. (20 கி)

## பதிவுகள் நிறுத்தம் பெற்றோர் அவதி

பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் இவ்வாண்டு யூலை மாதம் முதலாந் திகதி வரை பிறந்த குழந்தைகளின் பிறப்புப் பதிவுமட்டுமே பதியப்பட்டுள்ளது.

அதற்குப்பின்னர் பிறந்தகுழந்தைகளின் பிறப்பைப் பதிவதற்கு பதிவுப்புத்தகங்கள் கைவசம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பங்கீட்டு முறையில் பெறப்படும் பால்மாப் பைக்கற்றுக்களைப் பெறுவதில் பெற்றோர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

பிறப்புச் சாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்காவிட்டால் பால்மாப் பைக்கற்றுக்கள் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப் பட்டுள்ளது. (17 கி)

## கரையோரப்பகுதியில் பல வீடுகள் சேதம்

நேற்று முன்தினம் காலை தொடக்கம் மாலை வரை யாழ். கரையோரப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதலினால் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன. இங்கு மக்கள் இல்லாத காரணத்தினால் உயிர்ச் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.

அல்லைப்பிட்டியிலிருந்தே இந்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றது. (ப- 25 கி)

## பல்கலைக்கழக மாணவன் இராணுவ சூட்டுக்குப் பலி

யாழ். பல்கலைக்கழக முதலாம்வருட கலைப்பீடமாணவன் பி. ஏ. ஜோசப் ராஜா ஊர்காவற்றுறையில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவரது குடும்பத்தில் ஒருவரைத்தவிர மிகுதி அனைவரையும் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுவிட்டனர். இவர் ஊர்காவற்றுறை வாசியாவார். (ப-25 கி)

## ஓர் ஓட்டுக்கு 5 ரூபா கூலி

சைக்கிள் ஓட்டும் 'சொலிசனுக்கும்' தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபடியால் சைக்கிள் ஓட்டுவதற்கு 5 ரூபா கட்டணமாக அறவிடப்படுகிறது. (48 கி)

## தீவக மக்களுக்கு சங்கம் உதவி

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட வேலணைப் பகுதி மக்களுக்கு வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடனடிப்படையில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்துள்ளது.

குறிக்கப்பட்டதொரு பணத்திற்கு அரிசி, கௌபி, பருப்பு, சீனி. உழுந்து போன்ற பொருட்களை இச்சங்கம் வழங்கியுள்ளதுடன் இச்சங்கத்துடன் தொடர்பில்லாத பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (24கி)

## ஒரு மருமகள் மறுதலிக்கிறாள்

(நேற்றைய தொடர்ச்சி)

-மேத்தா

உன்
கட்டளைகளுக்குக்
கட்டுப்படுகிற போதெல்லாம்
நாங்கள்
கட்டப்படுகிறோம்

卐

உன்னுடைய
ஐந்து விரல்களின்
ஆதிக்க வெறிகளினால்
எங்கள்
கட்டை விரல்களெல்லாம்
காணாமல் போகின்றன!

卐

உன்னுடைய
அதிகாரங்கள்
எங்கள்
வயிற்றைக் கெடுக்கும்
அதிக
காரங்களாகி விட்டன ....

卐

சமையல் அறைகள்
நாங்கள்
பணிபுரியும் ராம ராஜ்யம்......
சாப்பாட்டு மேசையெல்லாம்
உன்னுடைய
தனியுடைமை சாம்ராஜ்யம்!

卐

நீ
காற்றில் விதைத்துவிட்டு
எங்கள்
கைகளையா அறுப்பது?
வெறும்
வார்த்தைகளை உதிர்த்துவிட்டு
எங்கள்
வாழ்வையா செரிப்பது?

卐

எங்கள் வருமானம்
உனக்கு
வெகுமானம்!
உன்னிடத்தில்
திருப்பி அதை
உதவியாய்ப் பெறும்போதோ
அது
நாங்கள்
தன்மானம் இழந்து
வாங்கும்
சன்மானம்!

卐

நீ
உடைப்பது
எங்கள் உண்டியல்களை
மட்டுமல்ல ....
ஒற்றுமைகளையும் தான்!

卐

எங்கள்
வேர்வைத் துளிகளை
நீ
சென்டாகப் பூசுகிறாய்!
சில சமயம் எங்கள்
குருதித் துளி தெளித்து
உன்
குளியல் நடத்துகிறாய்!

卐

நீ
எங்களைக்
கழுத்தில் அணியாமல்
காலில்
அணிகின்றாய்......

卐

உன்னுடைய
சட்டாம்பிள்ளைத் தனத்தைச்
சகிக்க முடியாமல்தான்
இந்தப்
பட்டாம் பூச்சி
வெளியே
பறக்கத் துடிக்கிறது!

(நாளை தொடரும்)

இன்னும் 5 கோடி ரூபா தேவை

# யாழ். செயலகம் வந்த 50லட்சம் ரூபா போதாத நிலை!

யாழ். செயலகத்திற்கு கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக அனுப்பிவைக்கப்பட்ட 50 லட்சம் ரூபா யாழ். செயலக நேரடி நிர்வாகத்திற்குட்பட்ட சில திணைக்களங்களுக்கு மட்டுமே முழுமையாக வழங்கக்கூடியதாக இருந்தது என்று அறியப்படுகிறது.

ஒய்வூதியம் பெறுபவர்களுக்கும் ஏனைய திணைக்களங்களுக்கும் வழங்க இன்னும் ஐந்து கோடி ரூபாவுக்கு மேல் தேவைப் படுவதாக அரச திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். (66-து)

## இளைப்பாற்றுச் சம்பளப் பத்திரம் தபாலில் அனுப்பிவைக்கப்படும்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் இருந்தும் ஏனைய சில பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்தவர்களுக்கே ஆகஸ்ட் மாத இளைப்பாற்றுச்சம்பளம் யாழ். செயலகத்தில் வைத்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏனையோரின் பத்திரங்கள் தபால் மூலம் உரிமையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இதனால் அவர்கள் வீணாக செயலகத்திற்கு வந்து அலைய வேண்டாம் என ஒய்வூதியப் பகுதி கணக்காளர் கேட்டுள்ளார்.

இளைப்பாற்றுச் சம்பளப் பத்திரம் பெறுவதற்கான ஆயிரக்கணக்கானோர் நேற்று செயலகத்தில் குவிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (66-து)

## கரையோரப்பகுதிகளை நோக்கி கடற்படை கடும் தாக்குதல்

நேற்றுக் காலை 7.50 தொடக்கம் பாசையூர் கடலில் நின்ற பீரங்கிப்படகில் இருந்து கலிபர் தாக்குதலும் ஆட்லறி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதலினால் அச்சுக் கூட ஒழுங்கையில் உள்ள பி. ஆரோக்கியநாதர் என்பவரின் வீட்டில் ஷெல் விழுந்ததனால் அவருடைய வீடு சேதமடைந்தது.

யாழ். பிரதான வீதியில் உள்ள மரம் ஒன்றின் மீதும் ஒரு ஷெல் விழுந்து வெடித்தது. இத்தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். இத் தாக்குதல் 40 நிமிடங்கள் வரை நீடித்தது. ப 25 கி

## வீதியில் நடமாடிய மக்களை ஹெலி வேட்டுக்களை தீர்த்துக் கலைத்தது

நேற்று பலாலிக்கும் மண்டைதீவுக்கும் இடையில் போக்குவரத்தை மேற்கொண்டிருந்த ஹெலி ஒன்று அடிக்கடி வீதிகளில் நின்ற மக்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டு சென்றது.

காலையில் நல்லூர்ப் பகுதியில் ஹெலி மக்களை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

பின்னர் மாலை 2 மணியளவில் திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் தாக்குதலை மேற்கொண்டது. இதில் ஒருவர் காயமடைந்தார். சில கால்நடைகளும் காயமடைந்தன.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது என்ற செய்தி நேற்று வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது இதனையடுத்தே மக்கள் அச்சமின்றி வீதிகளில் நடமாடினர் என்பது குறிப்பிடத் தக்கது. (70 து)

### தபால்கள் சேகரிக்கப்படும்

யாழ்ப்பாணப் பிரதம தபாலக நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் தமக்குரிய வெளியூர்த் தபால்களை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் பிரதம தபாலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் தபால் பெட்டியில் போடலாமென்று தபால் அலுவலகத் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பெட்டியில் போடப்படும் கடிதங்கள் சேகரிக்கப்பட்டு வாரா வாரம் கப்பலில் கொழும்புக்கு அனுப்பப்படும் என்றும் அவர் தெவித்தார். 33

**விபரம்...**
ரியாட் ஆகிய இடங்களில் உள்ளவர்களின் மேலதிக விபரங்கள் விசாரணைகள் பற்றியவற்றை அவர்களது உறவினர்கள் அறிவதற்கு மானிப்பாயில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கப்பிரிவு குறிப்பிட்டதொரு திகதியினை பத்திரிகைக்கு வழங்கும் என்றும் அதற்கு முன்னர் எந்தவொரு விசாரணைகளும், விபரங்களும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் மானிப்பாயில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவு தெரிவித்துள்ளது. (ப11-து)

**இனப்படுகொலை..**
அகதிகள் நிறுவனங்கள்' மனித உரிமைகள் நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், தேவாலயக்குழுக்கள் முதலியனவற்றின் சார்பில் இரு நூறுக்கும் அதிகமான பேராளர்கள் இம் மகா நாட்டில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (9)

**சடலங்களிலும்...**
கொள்ளையடிக்கும் கோஷ்டி ஒன்று தினமும் கடற்கரையோரங்களில் திரிந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 19-து

**மக்கள்...**
வானத்தில் சுற்றிக்கொண்டிருந்தபோது மக்கள் கலைந்து ஓடியதால் தொடர்ந்து தபால்களை வழங்கமுடியாது போனதாகத் தபால் திணைக்கள அத்தியட்சகர் சேதுகாவலர் தெரிவித்தார்.

அச்சம் காரணமாக சில இடங்களில் குறிப்பிட்ட சிலர் இடம் பெயர்ந்துள்ளதால் அவர்களிற்கான தபால்கள் விநியோகிக்க முடியாதுள்ளன. அவர்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வந்து தமது தபால்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தபால்களைப் பெற வருபவர்கள் தமது சைக்கிள்களை கல்லூரி வளவினுள் மரங்களுக்குக்கீழும் பாதுகாப்பான இடத்திலும் நிறுத்திவைத்து திணைக்களத்துடன் ஒத்துழைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (70-து)

### வீரமரணம்

நேற்று (11-9-90) அன்று யாழ். கோட்டை ராணுவ முகாமில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா ராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதலில் வீரவேங்கை அமலதாஸ் (கணேசராசா முரளீதரன்) வீரமரணமடைந்துள்ளார்.

### உண்மை விளக்க கூட்டம் இன்று

கட்டைவேலி, நெல்லியடி பல. நோ. கூ. சங்க நிதி கையாடல் பற்றிய உண்மை விளக்கக் கூட்டம் இன்று வியாழன் காலை 10 மணிக்கு நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர் தலைமையில் நடைபெறவுள்ளது. 9-ரு

### கிழக்கில் சிப்பாய் பலி

கிழக்கில் சுங்கான் கேணியில் கடந்த திங்கள் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார். மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

பெரியபுல்லுமலையில் ஐந்து தமிழ்ப்பெண்கள் இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். 9-ம

### இலங்கை வங்கி ஊழியருக்கு

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையை மீண்டும் திறந்து இயங்கச் செய்வது பற்றிய முக்கிய ஆலோசனைக் கூட்டமொன்று இன்று 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி வங்கிக் கிளைக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இவ் வங்கி ஊழியர்கள் அனைவரையும் தவறாது குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு பொது முகாமையாளர் திரு. சி. என். நவரத்தினராசா கேட்டுள்ளார். 13-ம

### உதவிப் பணம்

நீராவியடி உபதபால் நிலையத்தில் கந்தர்மடம், நீராவியடி, வண்ணார் பண்ணை வடகிழக்கு கிராம சேவகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை வெள்ளியன்று ஜூலை மாத உதவிப் பணம் வழங்கப்படவுள்ளது.

**சத்துருக்...**
தாக்குதலுக்கு உள்ளாகி மரணமானதையடுத்தே இச் சம்பவம் இடம்பெற்றது. (9-ம)

**போர்...**
ளிகள் மீண்டும் அரசுடன் பேச்சு நடாத்தவும் இந்தியா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என ஜெயலலிதா நேற்று விடுத்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுளளார். (து

**சுன்னாகம்...**
னாகம் மின்சார நிலையத்திற்கு அருகே விழுந்துவெடித்தது குண்டு விழுந்து வெடித்த இடங்களுக்கு அருகே நின்ற மரங்கள் பலத்த சேதங்களுக்கு உள்ளானதைக் காணக்கூடியதாக இருந்தது. (ப10—14-து)

நால்வர் இதுவரை பலி

## மண்கும்பான் அகதிமுகாமில் வயிற்றோட்டம் அதிகரிப்பு

மண்கும்பான் அகதிகள் முகாமில் வயிற்றோட்ட நோயினால் இறப்போர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இதுவரை அகதிகள் முகாமில் மூன்று சிறுவர்களும், ஒரு வயோதிபரும் இறந்துள்ளனர் மேலும் பலர் வயிற்றோட்ட நோயால் பீடிக்கப்பட்டு வேலணை, புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். 19 து

யாழ். இந்து மகளிர் கல்லூரியில்

## இன்று முதல் பதிவுத்தபால் விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் யாழ். பிரதம தபாலகத்தில் இன்று தொடக்கம் (வியாழக்கிழமை) வெளியூர் பதிவுத் தபால்கள் விநியோகம் செய்யப்படவிருப்பதாகத் தபால் திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ். பிரதம தபாலக நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்த சகல மக்களையும் வேலை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 12மணி வரைக்குமிடையில் கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (33ஸ்ரீ)

## ஏற்பு வலி சிகிச்சைக்கு நோயாளர் அதிகம்

மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பு வலி காரணமாக சிகிச்சை பெறுபவர்கள் தொகை அதிகரித்து வருகின்றது.

தற்போது இடம்பெறும் பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதல்களினால் ஏற்படும் சிதறல்களால் பலருக்கு காயங்கள் ஏற்பட்டு வருவதே இந்த அதிகரிப்புக்குக் காரணமாகும் (68 ரு)

## இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு ஆவணி முற்பணம் விரைவில்

இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்துக்கு வந்துள்ள முல்லைத்தீவு, மட்டக்களப்பு அம்பாறை, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் ஆவணி மாத முற்பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஊழியர்கள் நாளை வெள்ளிக் கிழமைக்கு முன்னர் இதற்குரிய படிவத்தை யாழ். கல்வித்திணைக்களத்திற்கு நேரில் சமூகமளித்து நிரப்பிக் கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான முற்பணக் கொடுப்பனவு வழங்கப்படும் திகதி பின்னர் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும். ப 17 கி

மண்டைதீவில்

## கொல்லப்பட்டவர்கள் கிணற்றுள் போடப்பட்டனர்

தற்பொழுது அல்லைப்பிட்டி மண்கும்பான் பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா ராணுவத்தினர். மண்டைதீவில் அநேக பொதுமக்களை கொலை செய்த சடலங்கள் பதுங்கு குழிகளுக்குள் கிடக்கின்றதாம் அவற்றில் சில சடலங்கள் மண்டைதீவில் உள்ள நல்லையாவிற்குச் சொந்தமான செம்பாட்டு தோட்டத்தில் உள்ள கிணற்றுக்குள் போடப்பட்டுள்ளதாம். முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட பணயக் கைதி ஒருவரால் இது தெரிவிக்கப்படுகின்றது. (19து

## கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தீவுப்பகுதிக்கு உணவு

நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு பகுதிகளுக்கு 'சிகிரியா' கப்பல் மூலம் கொழும்பிலிருந்து நேரடியாக உணவுப்பொருட்கள் வழங்கப்படவுளளன.

இப்பகுதிகளுக்கு தற்போது படகுச் சேவைகள் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 68-ம

### கடும் சோதனை

குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து நயினாதீவுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற படகு ஒன்று நயினாதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினரால் கடற்படைத்தளத்தில் நிறுத்தப்பட்டு பல மணித்தியாலயங்களாக அதில் உள்ள உணவுப் பொருட்கள் ஒவ்வொன்றும் தீவிரமாக சோதனையிடப்பட்ட பின்னர் பொருட்களை இறக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டதாம். (20கி)

### மக்கள் வெளியேற்றம்

சுண்டிக்குளி, குருசோ வீதி, கரையூர்ப் பகுதிகளிலிருந்து தற்சமயம் பெருமளவில் மக்கள் வெளியேறி வருகின்றனர்.

நேற்றுக்காலை பெருந்தொகையானோர் ஓட்டுமடம், ஆனைக்கோட்டை, மானிப்பாய் ஆகிய இடங்களூடாகப் பல இடங்களுக்கும் பிரிந்து சென்றதை அவதானிக்க முடிந்தது. இவர்கள் தங்களுடன் தேவையான பொருட்களையும் எடுத்துச் செல்கின்றனர். (ப- 1 கி)

### அனுப்பப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றிய ஊழியர்களின் ஆகஸ்ட் மாத வேதனம் முரசுமோட்டையில் இயங்கும் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-3-கி)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறெற்ட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங், இல் உள்ள அச்சகத்தில் 13-09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.